பன்னாட்டுத் தமிழ் ஆய்வு இதழ்
BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
E - ISSN: 3139 -1893
An international open access, peer- reviewed, Online Multi – disciplinary refereed journal

# படுகர் சமூகத்தின் வாழ்க்கை முறையும் பண்பாடும்

முனைவர் இரா. கவிதா
எம்.ஏ.,எம்.எட்.,எம்.பில்(தமிழ்).,எம்.பில்(கல்வி).,பிஎச்.டி., உதவிப்பேராசிரியர், எஸ்.ஏ.கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவேற்காடு, சென்னை-600 077, மின்னஞ்சல்: kavithar@sacas.ac.in Orchid id: https://orcid.org/0000-0002-9896-1322

**ஆய்வுச்சுருக்கம்**

நீலகிரி மலைப்பகுதியில் வாழும் பழங்குடியினங்களில் படுகர் சமூகத்தினர் முக்கிய இடத்தை வகிக்கின்றனர். இவர்களின் சமூக அமைப்பு பாரம்பரியம், பரஸ்பர சார்பு, மற்றும் ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்டது. இயற்கையோடு இணைந்த வாழ்க்கை முறையைக் கடைப்பிடிக்கும் இவர்கள், தங்கள் பண்பாட்டையும் சமூக ஒழுங்கையும் தலைமுறைகளாகப் பாதுகாத்து வருகின்றனர்.படுகர்கள் பேசும் மொழியான படுகு (Badugu), திராவிட மொழிக்குடும்பத்தைச் சேர்ந்ததாக இருந்தாலும், எழுத்து வடிவமற்ற வாய்மொழியாகவே இருந்து வருகிறது. இம்மொழி தொன்மையான திராவிட கூறுகளை தன்னகத்தே கொண்டதுடன், அவர்களின் பண்பாட்டு அடையாளத்துடன் ஆழமாக இணைந்துள்ளது. படுகர் வாழ் மக்களின் பண்பாட்டைப்பற்றிக் இக்கட்டுரையில் காணலாம்.

**திறவுச் சொற்கள்**

படுகர் உணவுமுறை - படுகர் வரலாற்றில் நாட்காட்டி- படுகர்களின் இடப்பெயர்ச்சியும் மலைப்புல வேளாண்மையும்- படுகர்களின் தெய்வ வழிபாடு- எருமை மந்தை - பால்மனை – நம்பிக்கைகள்- படுகர் இனமும் குறிஞ்சி மலரும்- படுகர் மக்களின் மரண சடங்குகள்- இறப்புச் சடங்குகள் : வீரராயப் பணமும் ஏழடுக்குச் சப்பரமும்

## முன்னுரை

மானிடவியல் என்பது மனித இனத்தின் தோற்றம், வளர்ச்சி, பண்பாடு மற்றும் சமூக அமைப்புகளை ஆராயும் முக்கியமான அறிவியல் துறையாகும். மனிதன் வாழும் சூழல், அவனது பழக்கவழக்கங்கள், மொழி, நம்பிக்கைகள் மற்றும் சமூக அமைப்புகள் ஆகியவை ஒருங்கிணைந்து ஒரு சமூகத்தின் அடையாளத்தை உருவாக்குகின்றன.தமிழ்நாட்டின் நீலகிரி மாவட்டம் பல்வேறு பழங்குடியின மக்களின் வாழ்விடமாக விளங்குகிறது. அவற்றில் முக்கியமான இனக்குழுவாக படுகர் மக்கள் திகழ்கின்றனர். குறிப்பாக குந்தா பகுதியை மையமாகக் கொண்டு அவர்களின் வாழ்வியல் கூறுகளை ஆய்வு செய்வது, அவர்களின் தொன்மை அடையாளத்தையும் சமூக மாற்றங்களையும் புரிந்துகொள்ள உதவுகிறது.

## படுகர் உணவுமுறை

படுகர்களின் வாழ்வை அவர்களின் கூட்டு வாழ்நிலையே நிர்ணயிக்கிறது. பாதீடும், காவலும், கூட்டு நடனமும் குழுவின் முக்கிய நடவடிக்கைகள். சாமை, கேழ்வரகு, தானியங்கள் விளைய அவற்றின் கதிரை அறுத்துச் சாமிக்குப் படைத்த பின்பு வீடுகளுக்குக் கொண்டு வரும் 'புத்தரித் திருவிழா' (புதுக்கதிர் தெய்வத்திருவிழா) குழுவைப் பிணைத்துள்ளது. பண்டிகைக்கு முன்பே ஊரில் தனியாகத் தானியத்தை அறுப்பதும் உண்பதும் மீறல். திருவிழா காலதாமதமாகும் போது, உணவிற்குத் தானியங்கள் இல்லாதவர்களின் வீடுகளின் வாசலில் இரவில் கூடையில் கிழங்கையும் சாமையையும் வைத்துச் செல்வது தானியங்கள் வைத்திருப்பவர்களின் வழக்கம். “அரத்துப் பந்தமக அன்னவ கொடு. பெரத்துப் பந்தமக பெக்கெய கொடு” என்பது படுகர்களின் முதுமொழி. பசித்து வந்தவர்களுக்கு அன்னத்தைக் கொடு, குளிரில் வந்தவர்களுக்குக் கம்பளியைக் கொடு என்பது பொருள். படுகர்களின் வீட்டில் கதவுகள் அடைக்கப்படுவது இல்லை. எப்பொழுதும் வருபவர்களுக்கு உணவும் அடைக்கலமும் மலையில் உண்டு

என்று மலைப்பகுதியில் வாழும் படுகர் இன மக்களின் பண்புகள் கூறப்படுகிறது.

*"நும் இல் போல நில்லாது புக்கு….*
*கிழவர் போல கேளாது கெழீஇ*
*சேண் புலம்பு அகல இனிய கூறி*
*பரூஉ குறை பொழிந்த நெய்க்கண்*
*குரூஉ கண் இறடி பொம்மல் பெறுகுவீர்………"*

*(மலைபடுகடாம் 158-169)*

**படுகர் வரலாற்றில் நாட்காட்டி**

படுகர் புத்தாண்டின் முதல் மாதம் கூடலு. கூடலு ஓரை (ராசி) க்குரிய 10-வது நட்சத்திரமான மகம் என்பதன் பொருள் நுகம் என்பதாகும். வளைந்திருப்பதால் சங்க இலக்கியம் (அகநானூறு 350) இதனைக் கொடுநுகம் என்று குறிப்பிடுகிறது. இந்த கொடுநுகம் எனும் சொல்தான் படுகாவில் கூடலு என்றுள்ளது. கூடலு மாதத்தில்தான் ஏர் மாத்தோ அப்ப என்ற பண்டிகையை முன்னர் கொண்டாடி இருக்கின்றனர்.அதாவது, ஓராண்டின் வேளாண் பணிகள் அனைத்தும் முடிந்து உழும் ஏருக்கு சில நாள் ஓய்வளித்துள்ளனர். படுகர் பண்பாட்டு அடையாளங்களுள் குறிப்பிடத்தக்கதாக காலக்கணக்கு அமைந்துள்ளது. எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் ஆகிய பண்டை நால்வகை அளவைகளில், நான்கிலும் படுகர் தமக்கே உரிய வகையில் அளவுகளை வைத்துள்ளனர். இவற்றுக்கு முத்தாய்ப்பு வாய்த்ததுபோல் காலத்தை கணக்கிடும் அளவையும் கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

படுகு மொழியில் ஜெந (நாள்), பார (வாரம்), திங்குவ (மாதம்), பருச (வருடம்) ஆகியவை காலக்கணக்கைக் காட்டும் சொற்கள். தமிழ் இலக்கணம் காலத்தை பெரும்பொழுது, சிறுபொழுது என்று இரண்டாகப் பகுத்துள்ளது.காலை, நண்பகல், ஏற்பாடு (சாயுங்காலம்), மாலை, யாமம், வைகறை ஆகிய ஆறும் சிறுபொழுதுகள். ஞாயிறு தோற்றம் முதல் இந்த ஆறு சிறு பொழுதுகளும் பத்து பத்து நாழிகை அளவு கொண்டன. இதே வகையில் படுகு காலக்கணக்கில் ஆறு சிறுபொழுதுகள் உண்டு.

அவ்வகையில் ஒரக்கது (காலை), ஹகலு (நண்பகல்), பூ ஹொத்து (ஏற்பாடு - சாயுங்காலம்), சந்தொத்து (மாலை), இரு (யாமம்), கோயிஜாம (வைகறை) என்பவை சிறு பொழுதுகளாகும். சிறு பொழுதின் கால அளவு பத்து நாழிகை (நான்கு மணி நேரம்) படுகர் நாள் கணக்கில், சூரியன் உதயத்திலிருந்து மறு நாள் சூரியன் உதயம் வரை ஒரு நாள். ஒரு வாரத்துக்கு ஏழு நாட்கள். சோவார (திங்கள்), மங்கவார (செவ்வாய்), பொதவார (புதன்), சிக்குவார (வியாழன்), பெள்ளி (வெள்ளி), சநி (சனி), ஆதிவார (ஞாயிறு). இவை முறையே சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, சூரியன் எனும் கோள்கள் வரிசையில் அமைந்தன. இவற்றுள் சிக்குவார என்பது சுக்கிரனை குறிக்கும் எனக் கொள்ள இடமுண்டு. அவ்வாறானால் சிக்குவார என்பது சுக்கிரன் கோள் அடிப்படையில் வெள்ளிக்குரியது என்றாலும், படுகு மொழி வெள்ளிக்கு பெள்ளி என்றும், சிக்குவார என்பதை வியாழன் என்றும் கொண்டுள்ளது.

**படுகர்களின் இடப்பெயர்ச்சியும் மலைப்புல வேளாண்மையும்**

விஜய நகர, திப்பு சுல்தான் ஆட்சிக் காலங்களில் மைசூரில் இருந்து பண்டிப்பூர் காடுகளின் வழியாக நீலகிரி மலையில் வந்து குடியேறியவர்கள். மைசூர் என்பது எருமை ஊர் என்றே முன்னர் அழைக்கப்பட்டது. மரகதமலை, மூக்குமலை, மணிக்கல், தேன்மலை… போன்ற ஆறு மலைகளில் எருமை மந்தைகளை மேய்ப்பதற்கு ஏற்ப, பெயர்ந்து வாழத் தொடங்கினர். 'படுகர்கள் பதினாறாம் நூற்றாண்டில் மைசூர் பகுதிகளிலிருந்து நீலகிரிக்குக் குடியேறினர்' என்கிறார் பக்தவத்சல பாரதி.

மரபார்ந்து வாழும் நிலங்களைத் தொதநாடு, மேக்குநாடு, பொராங்காடு, குந்தே என நான்கு பிரிவாகப் பிரித்துக் கொண்டுள்ளனர். அங்கு ஒவ்வொரு ஹட்டியும் பல ஹட்டிகளை இணைத்தே செயல்படுகிறது. மலை முழுவதும் பரந்து காணப்படும் திணைப் பண்பாட்டின் ஒரு வட்டார வெளிப்பாடாக ஹட்டி அமைந்துள்ளது. வேட்டை, காவல், கூட்டுறவு அடிப்படையில் அது ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. பரண் அமைத்து முறைக்காவல் மூலம் மந்தைகளைப் பராமரிக்கும்

காவல்காரர் ஒவ்வொருவரிடமும் ஊதுகுழல், தீயை உண்டாக்கும் ஞெலி கோல் இரண்டும் உண்டு. பாரம்பரியமாகக் காடுகளில் மேய்ப்பு, வேட்டை, சிறு விவசாயம், வனவளச் சேகரிப்பு போன்றவற்றை வாழ்க்கையின் ஆதாரமாகக் கொண்டவர்கள் படுகர்கள். காலப்போக்கில் இக்கட்டமைப்பு சிதைவுறுவதை நாவல் எடுத்துரைக்கிறது.

**படுகர்களின் தெய்வ வழிபாடு**

இயற்கை வழிபாட்டை தங்கள் வாழ்க்கையில் ஒரு முக்கியமான அங்கமாக கொண்டுள்ளனர். காலை வேளையில் சூரிய வணக்கம் செய்யாமல், அன்றாட செயல்களை தொடங்க மாட்டார்கள். கிருஷ்ண ஜெயந்தி, விநாயகர் சதுர்த்தி, மாரி ஹப்பா, முருகர் ஹப்பா, ராமர் ஹப்பா, அனுமன் ஜெயந்தி போன்ற விழாக்களும் வெகு விமரிசையாக கொண்டாடி வருகிறார்கள். படுகர்கள் காடு, மரம், மலை, ஆறு போன்ற இயற்கை வழிபாட்டைப் படையல் வைத்து வழிபடுபவர்கள். விலங்குகள், தெய்வங்கள் ஆகியவற்றை மனிதக் குழுமங்களோடு இணைத்துச் சடங்குகள், சாமியாட்டம் படுகர்களின் சமய வாழ்வின் ஒரு பகுதி. நோய், மரணம், மகப்பேறு போன்ற அனைத்துக்கும் பல்வேறு சடங்குகள் உள்ளன. சமூகத் தளத்தில், குழுவினரின் ஒற்றுமை, பெரியவர்களின் ஆலோசனை, தீர்ப்பு ஆகியவை திணைசார்ந்த வாழ்வியலை வழி நடத்துகின்றன.

*“அலங்கு கழை நரலும் ஆரிப் படுகர்ச்*
*சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி,*
*நோனாச் செருவின் வலம் படு நோன் தாள்*
*மான விறல் வேள் வயிரியம்' எனினே”*

*(மலைபடுகடாம்161-162)*

மலைபடுகடாம் பாடலில் 'ஆரிப் படுகர்' என்பவர் இருந்தாக மலைபடுகடாம் நூலில் இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் பாடிய பின்வரும் வரிகள் மிகவும் பிரபலமானவை: ஒவ்வொரு ஹட்டியின் கீழ்ப்புறம் சிறு குடில் உண்டு. அதில் முன்னோரான ஹெத்தப்பா தெய்வமாக உறைந்துள்ளார். கோயிலுக்கு முன் விரிந்திருக்கும் சமவெளியான மைதானமே குடிகளின் பஞ்சாயத்து கூடும் இடம். கல் திட்டை ஒன்று ஊருக்குள் நுழைபவரைப் பார்க்கும் படி அங்கு அமைக்கப்பட்டுள்ளது. ஹெத்தே கோவிலுக்குப் படுகர் குடியிலிருந்து நியமிக்கப்படும் பாலகன், ஒருவேளை உணவு உண்டு, கோவிலைத் தூய்மை செய்து கோவில் நிலங்களில் சிறிய அளவில் வேளாண்மை விளைவித்து, சாமி எருமைகளைப் பராமரித்துத் தன் வாழ்நாளைக் கோவில் பணியிலே கழிக்க வேண்டும். ஆமணக்கு எண்ணெயில் விளக்கும் தீப்பந்தமும் அங்கு சுடர்ந்து கொண்டிருக்கும்.



சிறுபாணாற்றுப்படை வேலூர் என்பது வேல் முருகன் என்பதில் இருந்தே வந்தது என்று கூறி உள்ளது.

*"திறல் வேல் நுடியில் கேனி*
*விரல் வேல் வென்றி வேலூர்*
*ஈட்டி முனைப் போல, தாடகத்தில் மலர் இருக்க,*
*வல்லமை வாய்ந்த ஈட்டியும் வெற்றியுமான வேலூர்"*

*(சிறுபாணார்படை: 172-173)*

நச்சினார்கினியர் என்பவர் இந்த நகருக்கு இந்தப் பெயர் வந்ததின் காரணத்தை ஒரு கிராமியக் கதை மூலம் கூறி உள்ளார்.முருகன் கையில் வலியுடனையாக்கிய வேலின்ஈட்டி போலே கேனி பூக்கப்பட்ட வெற்றியையுடைய வேலாலே வெற்றியையுடைய வேலூர் என்றது ; இதன் அர்த்தம்: முருகனின் கையில் உள்ள வலிமையான ஆயுதமான வேலைப் போலவே அந்த தாடகத்தில் பூத்த மலரும், அந்த ஊருக்கு வெற்றியைத் தர, அந்த வேலின் பெயராலேயே வேலூர் என்றாயிற்று.

நல்லியக்கோடன் தன் பகைமிகுடிக்கு அஞ்சி முருகனை வளிப்பட்டவழி அவன் இக்கேனியிர் புவி வங்கிப் பகைவரை எரி என்று கானநீர்குறி அதிர்ப்புவைத்தான் வேலாக நிருமிட்டதொரு கதை கூறிறு இதனாலே வேலூர் என்று பெயராயிற்று . மேல் உள்ளத்தின் கதை

இது: ஒருமுறை நல்லியக்கோடன் தனது எதிரிப் படையினரைக் கண்டு துக்கசாகரத்தில் முழுகி முருகனின் அபயக் கரத்தைக் கேட்டான். அவன் கனவில் தோன்றிய முருகன் அங்குள்ள குளத்தில் இருந்து ஒரு மலரைப் பறித்து அதை எதிரிகள் மீது வீசி அவர்களை அழிக்குமாறு கூறினார். அந்த மலரே முருகனின் வேல்கம்பாயிற்று. அதனால்தான் அந்த ஊருக்கு வேல் + ஊரு =வேலூரு என்றப பெயர் வந்தது.

**எருமை மந்தை - பால்மனை - நம்பிக்கைகள்**

எருமை நீலகிரியின் அடையாளம். தோடர், படுகர் சமூகங்களின் குலகுறிச் சின்னம். ஒவ்வொரு ஹட்டியும் நூற்றுக்கணக்கான எருமை மந்தைகளை உள்ளடக்கியது. "ஆயிரம் பொன் கொடுத்துப் பெண் கேட்பவரை விட ஆயிரம் எருமைகள் வைத்துப் பெண் கேட்பவர் ஹட்டியில் மதிப்புமிக்கவர்". நீலகிரியில் பாதிரியார் ஒருவர் தோடர்கள் முன்னிலையில் இந்தியா வந்திருந்த வேல்ஸ் துரையின் மதிப்பை எடுத்துரைக்கும் பொருட்டு அவரின் புகைப்படத்தைக் காட்டி "அவர் மிகப்பெருஞ்செல்வர். அவர் போகுமிடமெங்கும் இருநூறு பணியாளர்கள் உடன் செல்வர்". முதிய தோடர் ஒருவர் "அதெல்லாம் சரி அவரோடு எத்தனை எருமைகள் வரும்னு சொல்லுங்க"? எனக் கேட்டாராம். எருமையுடன் ஒப்பிட்டுத்தான் வேல்ஸ் துரையே நீலகிரியில் மதிப்பு பெறுகிறார். 'அண்ணல் ஏறு' என்றும் 'அணிநடை எருமை' என்றும் எருமைக்குப் புகழ் தந்த சங்க இலக்கியத்தின் நீட்சியை நீலகிரிப் பழங்குடிகளிடம் காணமுடிகிறது.

எருமை மந்தைகள் அடையும் தொழுவம் பால் கூடம் எனப்படுகிறது. பால் கறக்கும் நேரம் புனிதமானது. தெய்வத்தை வழிபடும்போது கடைபிடிக்கப்படும் புனித விதிகள் அனைத்தும் பால் மனையிலும் உண்டு. பால் மனைக் கொட்டிலுக்குள் மூங்கில் குழாயில் (ஹொனா) கரந்த பாலை, பெரிய மண்பானைகளில் ஊற்றித் தலைச்சுமையாக மற்றொரு இடத்திற்கு மாற்றுகின்றனர். நூற்றுக்கணக்கான மாடுகளில் பால் கறப்பதற்கு ஏற்பப் பன்னிரண்டு வயதில் வலது தோள்பட்டையில் சூடு போட்டு வலிமைப்படுத்திக் கொள்ளத் தொடங்குகின்றனர்.



**படுகர் இனமும் குறிஞ்சி மலரும்**

நீலகிரி மாவட்டத்தில் உள்ள எப்பநாடு பகுதியில் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கக்கூடிய குறிஞ்சி மலர்கள் பூத்துக் குலுங்குகிறது. மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி நிலம் என சங்ககாலம் முதலே அழைக்கப்பட்டது. இந்த மலையில் வாழும் படுகர் சமுதாய மக்களின் வாழ்க்கை முறையும் குறிஞ்சியோடு ஒன்றிணைந்துள்ளதென தெரிவிக்கின்றனர்.படுகர் சமுதாய மக்கள் நீலகிரி மாவட்டத்தில் சுமார் 300க்கும் மேற்பட்ட கிராமங்களில் பெரும்பான்மையாக வசித்து வருகின்றனர். இவர்களது வாழ்வோடு குறிஞ்சி ஒன்றிணைந்துள்ளது என தெரிவிக்கின்றனர்.

**படுகர் மக்களின் மரண சடங்குகள்**

பழங்குடியினரை விட படுகர்கள் மரணச்சடங்கை விமரிசையாகக் கொண்டாடுவர். முக்கியமான சடங்காக இறந்தவரின் பாவத்தைப் போக்க ஒரு கன்றுக்குட்டியை மக்கள் பாவப்பட்டது என்று முழக்கமிட, அது இறந்தவரின் பாவத்தைச் சுமந்து செல்வதாகக் கருதி மந்திரித்து விரட்டி விடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

**இறப்புச் சடங்குகள் : வீரராயப் பணமும் ஏழடுக்குச் சப்பரமும்**

இறப்புச் சடங்கில் பாடை கட்டும் முறை இறந்தவரின் மதிப்பையும் அவர் சார்ந்த சமூகத்தையும் அடையாளப்படுத்துகிறது. படுகர்களின் தனித்துவம் ஏழடுக்குச் சப்பரம். தமிழகத்தில் வேறு குடிகளிடம் காணமுடியாத ஒன்று. பகையாளிகளும் தவறாது கலந்து கொள்வர். ஏழடுக்குச் சப்பரமும் மூங்கில் கழிகளும் நீண்ட பிரம்புகளும் மலைக் குச்சிகளும் கொண்டு பாடை உருவாக்கப்படுகிறது. வண்ண வண்ணத் துணிகளாலான ஆறு அடுக்குகளும் மலைப்பிரம்புகளில் கருப்பு மண்டபம் போன்றதோர் அடுக்குமாகப் பாடை செய்யப்படுகிறது. அதைச் சுற்றி நின்று படுகர்கள்

பாரம்பரிய நடனத்தைக் கைகோர்த்து ஆடுகின்றனர். கோத்தர்கள் இசைக்கின்றனர். இறந்தவரின் நெற்றியில் இரு வெள்ளி ரூபாய்களை ஒட்டி, தானியம், வெல்லம், மாவு, அரிசி, கடலை, புகையிலை போன்றவற்றைப் பாடையில் வைக்கின்றனர். தீங்குகளைத் தவிர்க்கவும் பயிர்கள் முளைப்பது போன்று இறந்தவர் முத்தி பெறவும் ஆற்றல் வாய்ந்ததாகத் தானியம் பயன்படுத்தப்படுகிறது. மற்றவை இறந்தவர் மோட்ச உலகில் உண்பதற்காக வைக்கப்படுபவை. மூக்குமலையைச் சார்ந்த மாமன் முறைக்காரர்கள் பணியாரங்களைக் கூடைகளில் கொண்டுவந்து இறப்பு வீட்டில் அனைவருக்கும் தருகின்றனர். மன்னிப்பு வேண்டி இறந்தவரின் சார்பாகப் படுக மொழியில் ஒன்றைப் படிக்கும் வழக்கம் படுகர்களின் மரணச் சடங்குகளில் முக்கியமான நிகழ்வாகும். இயற்கையிடம் இனக்குழுக்கள் தங்களை மீண்டும் ஒப்படைக்கும் பண்பாட்டுச் செயல். இறந்தவர் சார்பாக மன்னிப்பு வேண்டுவது இயற்கைக்கு நன்றி பாராட்டும் சடங்காகும். குடியில் ஒருவர் இறந்து விட்டால் வீரராயப் பணம் கொடுப்பது படுகர்களின் வாடிக்கையாகும்.

**நிறைவுரை**

படுகர் இன மக்கள் விருந்தோம்பலில் சிறந்தவர்கள் குறித்துச் சங்க நூலான ‘மலைபடுகடாம்’ பேசுகிறது. இவர்களின் அலாதியான உடை, பாரம்பரியம், மொழி ஆகியவை இவர்களுக்கு உரிய முத்திரையாக திகழ்கிறது. படுகர் மக்கள் தமிழ்நாட்டின் நீலகிரி மலைப்பகுதியில் வாழும் ஒரு தனித்துவமான இனக்குழுவாக, அவர்களின் மொழி, பண்பாடு, சமூக அமைப்பு மற்றும் வாழ்வியல் முறைகளையும் பாரம்பரியத்தையும் இயற்கையுடனான இணைப்பையும் இக்கட்டுரை பிரதிபலிக்கின்றன.

**துணை நூற்பட்டியல்**


1. இராமலிங்கம், அரங்க., சங்க இலக்கியத்தில் வேந்தர், பாரதி புத்தகாலயம், சென்னை, 2011
2. குணசேகரன், கே.ஏ., நீலகிரி மலையின் மக்கள் ஆட்டங்கள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2005
3. சிதம்பரனார், சாமி., பத்துப்பாட்டும் பண்டைத் தமிழரும், அறிவுப்பதிப்பகம், சென்னை, 2015
4. சுனில்ஜோகி, கோ., நீலகிரி படகர்களின் தாவர வழக்காறுகள், பரிசல் பதிப்பகம், சென்னை, 2026
5. புஷ்பராஜ், பொன்.,(உரை) சிறுபாணாற்றுப்படை மூலமும் உரையும், சரதா பதிப்பகம், சென்னை, 2021


*****